## <u>தூத்துக்குடி மாநகராட்சி</u>

## <u>கூட்டப்பொருள்</u>

2016ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28ம் நாள் திங்கள் கிழமை காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெறும் சாதாரண கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## <u>பொருள்</u>

1. தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் கோவை, இயக்குநர் (பொ) அவர்களின் 19.09.2016ம் தேதிய ந.க.எண்.532/2016/அ2 கடிதத்தில் கோயம்புத்தூர் தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு இம்மாநகராட்சியின் சார்பாக 2016–2017ஆம் ஆண்டிற்கான வருடாந்திர பங்குத் தொகையாக ரூ 2,00,000/– செலுத்தும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இம்மாநகராட்சி சார்பாக ரூ. 2,00,000/–ஐ கோவை தமிழ்நாடு பயிற்சி நிறுவனத்திற்கு செலுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.சி1/18532/2010

2.தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதியில் வடகிழக்கு பருவமழையினை எதிர்நோக்கி மாநகர வார்டு பகுதிகளில் மழைநீர் உட்புகாவண்ணம் மாநகரின் மத்தியப்பகுதியில் செல்லும் பக்கிள் ஓடையில் உள்ள மண் அடைப்புகள் மற்றும் கழிவுகள் அகற்றி சுத்தம் செய்வது மிக அத்தியாவசியமாகிறது. எனவே பீச்ரோடு திரேஸ்புரம் பாலம் முதல் கடற்கரை முகத்துவாரம் வரை உள்ள பக்கிள்ஓடை பகுதியில் மண்மேடு மற்றும் குப்பை கழிவுகள் அகற்றும் பணியினை மாநகராட்சி விதி 15ன் கீழ் ரூ.1.10 இலட்சம் மதிப்பீட்டில் மாநகராட்சி பொதுநிதி 2016–17ம் ஆண்டு பணியாக மேற்கொள்ளப்பட்ட செலவினம் மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

அவசரம் அவசியம் கருதி மாநகராட்சி விதி 15ன் கீழ் மாநகராட்சி பொது நிதியில் ரூ.1.10 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ளப்பட்ட செலவினம் மாமன்றம் பதிவு செய்யலாம்.

இ1/ 5215/2016

3. தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதியில் வடகிழக்கு பருவமழையினை எதிர்நோக்கி மாநகர வார்டு பகுதிகளில் மழைநீர் உட்புகாவண்ணம் மாநகரின் மத்தியப்பகுதியில் செல்லும் பக்கிள்ஓடை ஒட்டியுள்ள வாய்க்கால் கரை பலப்படுத்துதல் மற்றும் தூர்வாறும் பணி மேற்கொள்ள வேண்டியது மிக அத்தியாவசியமாகிறது. எனவே பக்கிள்ஓடை ஒட்டியுள்ள மடத்தூர் இரயில்வே பாதை முதல் எப்சிஐ குடோன் வரை உள்ள பகுதியில் வாய்க்கால் கரை பலப்படுத்தி, தூர்வாறும் பணியினை மாநகராட்சி விதி 15ன் கீழ் ரூ.2.10 இலட்சம் மதிப்பீட்டில் மாநகராட்சி பொதுநிதி 2016–17ம் ஆண்டு பணியாக மேற்கொள்ளப்பட்ட செலவினம் மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

அவசரம் அவசியம் கருதி மாநகராட்சி விதி 15ன் கீழ் மாநகராட்சி பொது நிதியில் ரூ.2.10 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ளப்பட்ட செலவினம் மாமன்றம் பதிவு செய்யலாம்

இ1/ 5216 / 2016

4.தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதியில் வடகிழக்கு பருவமழையினை எதிர்நோக்கி கடந்த வடகிழக்கு பருவமழையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினை கருத்திற்கொண்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, மாநகர வார்டு பகுதிகளில் மழைநீர் உட்புகாவண்ணம் தூத்துக்குடி மதுரை புறவழிச்சாலையில் உள்ள சிறுபாலத்தின் வழியே வரும் மழைவெள்ளநீரை கட்டுப்படுத்த மணல் மூடை கொண்டு தடுப்புச்சுவர் ஏற்படுத்தும் பணி மேற்கொள்ள வேண்டியது மிக அத்தியாவசியமாகிறது.

எனவே தூத்துக்குடி – மதுரை புறவழிச்சாலையில் உள்ள சிறுபாலத்தின் வழியே வரும் மழைவெள்ளநீரை கட்டுப்படுத்த மணல் மூடை கொண்டு தடுப்புச்சுவர் ஏற்படுத்தும் பணியினை மாநகராட்சி விதி 15ன் கீழ் ரூ. 0.80 இலட்சம் மதிப்பீட்டில் மாநகராட்சி பொதுநிதி 2016–17ம் ஆண்டு பணியாக மேற்கொள்ளப்பட்ட செலவினம் மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

அவசரம் அவசியம் கருதி மாநகராட்சி விதி 15ன் கீழ் மாநகராட்சி பொது நிதியில் ரூ. 0.80 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ளப்பட்ட செலவினம் மாமன்றம் பதிவு செய்யலாம்.

இ1/ 5217 / 2016

5. தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதியில் வடகிழக்கு பருவமழையினை எதிர்நோக்கி கடந்த வடகிழக்கு பருவமழையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினை கருத்திற்கொண்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, மாநகர வார்டு பகுதிகளில் மழைநீர் உட்புகாவண்ணம் கணேசநகர் மேற்கு பகுதி முதல் முள்ளக்காடு சாமிநகர் உப்பளம் வரை உள்ள வடிகாலை தூர்வாறும் பணி மேற்கொண்டும் மற்றும் மணல் மூடை கொண்டு தடுப்புச்சுவர் ஏற்படுத்தும் பணி மேற்கொள்ள வேண்டியது மிக அத்தியாவசியமாகிறது.

எனவே கணேசநகர் மேற்கு பகுதி முதல் முள்ளக்காடு சாமிநகர் உப்பளம் வரை உள்ள வடிகாலை தூர்வாறும் பணி மேற்கொண்டும் மற்றும் மணல் மூடை கொண்டு தடுப்புச்சுவர் ஏற்படுத்தும் பணியினை மாநகராட்சி விதி 15ன் கீழ் ரூ. 2.47 இலட்சம் மதிப்பீட்டில் மாநகராட்சி பொதுநிதி 2016–17ம் ஆண்டு பணியாக மேற்கொள்ளப்பட்ட செலவினம் மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

அவசரம் அவசியம் கருதி மாநகராட்சி விதி 15ன் கீழ் மாநகராட்சி பொது நிதியில் ரூ. 2.47 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ளப்பட்ட செலவினம் மாமன்றம் பதிவு செய்யலாம்.

இ1/ 5218 / 2016

6. தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதி வார்டு எண்54, பொன்னான்டி நகர் பகுதியில் தற்போது பெய்த மழையில் மண்சாலையில் மழைநீர் தேங்கி பொது மக்களின் அன்றாட இயல்பு வாழ்க்கை பாதிப்படைவதை கருத்திற்கொண்டும், தேங்கியுள்ள மழைநீரினால் தொற்றுநோய் பரவாமல் சுகாதார கேடு ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டு, பள்ளமான இடங்களில் கிணற்றுசரள் நிரப்பும் பணி மேற்கொள்ள வேண்டியது மிக அத்தியா–வசியமாகிறது.

எனவே பொன்னான்டி நகர் பகுதியில் பள்ளமான இடங்களில் கிணற்றுசரள் நிரப்பும் பணியினை ரூ. 0.47 இலட்சம் மதிப்பீட்டில் மாநகராட்சி பொதுநிதி 2016–17ம் ஆண்டு பணியாக மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்–படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

மாநகராட்சி பொது நிதியில் ரூ. 0.47 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

இ1/ 5396 / 2016

7. தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதி வார்டு எண்40, தேவர்புரம் சாலையில் உள்ள தார்சாலை குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணிக்கு தோண்டப்பட்டு, மிகவும் குண்டும்குளியுமாக உள்ள காரணத்தினால் பொது மக்களின் பயன்பாட்டிற்கு உகந்ததாக இல்லாததால் பொது மக்கள், சமக ஆர்வலர்கள் மற்றும் பத்திரிக்கை செய்திகள் உள்ளூர் தொலைக்காட்சி ஊடகங்கள் வாயிலாக பெருமளவில் புகார்கள் வந்த வண்ணம் உள்ளதாலும், மாநகராட்சியின் மையப்பகுதியில் உள்ளதால் பள்ளி செல்லும் மாணவ, மாணவிகள் மற்றும் திருச்செந்தூரில் இருந்து வரும் பேருந்துகள் வழித்தடமாக உள்ளதாலும், பொதுமக்கள் நீதிமன்றம் செல்லும் வழித்தடமாக உள்ளதாலும், தேவர்புரம் சாலையில் (ஹோட்டல் சுகம் முதல் தெற்கு காவல் நிலைய சந்திப்பு வரை) தார் சாலை அமைக்கும் பணி மேற்கொள்ள வேண்டியது மிக அத்தியாவசியமாகிறது.

எனவே பொது மக்கள் நலன் கருதி தேவர்புரம் சாலையில் (ஹோட்டல் சுகம் முதல் தெற்கு காவல் நிலைய சந்திப்பு வரை) தார் சாலை அமைக்கும் பணியினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து ரூ. 55.40 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

பள்ளி மாணவ, மாணவிகள் மற்றும் பொது மக்கள் நலன்கருதி மாநகராட்சி பொது நிதியிலிருந்து ரூ. 55.40 இலட்சம் மதிப்பீட்டில் தேவர்புரம் சாலையில் (ஹோட்டல் சுகம் முதல் தெற்கு காவல் நிலைய சந்திப்பு வரை) தார் சாலை அமைக்கும் பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

இ1/ 5416 / 2016

8. தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதி வார்டு எண்3, ராஜீவ்நகர் பகுதியில் தற்போது பெய்த மழையில் மேற்படி சாலை மழைநீர் தேங்கி சேதமடைந்து பொது மக்களின் பயன்பாட்டிற்கு உகந்ததாக இல்லாததால், பள்ளி செல்லும் மாணவ, மாணவிகள், மற்றும் பொது மக்கள் ஆகியோர் மிகுந்த சிரமத்திற்குள்ளாவதால் ராஜீவ்நகர் குறுக்குத்தெரு (ராஜீவ்நகர் 11வது தெரு முதல் கோக்கூர் வரை) தார் சாலை அமைக்கும் பணி மேற்கொள்ள வேண்டியது மிக அத்தியாவசியமாகிறது.

எனவே பொது மக்கள் நலன் கருதி ராஜீவ்நகர் குறுக்குத்தெரு (ராஜீவ்நகர் 11வது தெரு முதல் கோக்கூர் வரை) தார் சாலை அமைக்கும் பணியினை ரூ. 10.50 இலட்சம் மதிப்பீட்டில் மாநகராட்சி பொதுநிதி 2016–17ம் ஆண்டு பணியாக மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

பள்ளி மாணவ, மாணவிகள் மற்றும் பொது மக்கள் நலன்கருதி மாநகராட்சி பொது நிதியில் ரூ. 10.50 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

இ1/ 5431 / 2016

9. தூத்துக்குடி மாநகராட்சி திரேஸ்புரம் மேட்டுப்பட்டி பகுதியில் உள்ள மாநகராட்சிக்குச் சொந்தமான எரிவாயு தகன மேடையை பராமரிக்க நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்குதுறை (ந.நி.3) அரசாணை எண்.(நிலை)228, நாள் 13–11–2008 இல் தனியார் அறக்கட்டளை மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு அனுமதி அளிப்பது குறித்து ஆணை பிறப்பித்துள்ளது.

மேற்கண்ட எரிவாயு தகனமேடையை மாநகராட்சி மாமன்றத்தீர்மானம் எண்.61, நாள்25/03/2015இன் படி பராமரிப்பு பணி மேற்கொள்ள ஸ்ரீசக்தி பவுண்டேசன், ராமநாதபுரம் என்ற நிறுவனத்திற்கு மூன்று ஆண்டுகளுக்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள அனுமதி வழங்க ஒப்புதல் அளித்துள்ளது.

இந்நிலையில் மேற்கண்ட எரிவாயு தகன மேடையை ஸ்ரீசக்தி பவுண்டேசன், ராமநாதபுரம் என்ற நிறுவனம், எரிவாயு தகன மேடை ஒப்படைக்கப்பட்ட நாள் முதல் நாளது தேதி வரை பயன்பாட்டிற்கு கொண்டுவர எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அரசாணை மற்றும் மேற்படி நிறுவனம் கொடுத்துள்ள ஒப்பந்த விபரப்படி மேற்படி எரிவாயு தகன மேடையினை பயன்பாட்டிற்கு கொண்டுவராததுடன், உரிய காரணங்களால் தகன மேடையினை பராமரிக்க இயலவில்லையெனில் அவ்விவரத்தினை மாநகராட்சி நிர்வாகத்திற்கு எழுத்துப்பூர்வமாக ஸ்ரீசக்தி பவுண்டேசன், ராமநாதபுரம் என்ற நிறுவனத்தால் தெரிவிக்கப்படவில்லை. ஒப்பந்தப்படி எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளாததால் ஸ்ரீசக்தி பவுண்டேசன், ராமநாதபுரம் என்ற நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட எரிவாயு தகன மேடை பராமரிப்பு அனுமதிக்கான செயல்முறை ஆணையினை இவ்வலுவலக கடிதம் எண் இ1/13075/2011, நாள் 15/11/2016 அன்று உடனடியாக ரத்து செய்து உத்தரவிடப்பட்டது.

இந்நிலையில் சூர்யா டிரஸ்ட், தூத்துக்குடி என்ற நிறுவனம் மேற்கண்ட எரிவாயு தகன மேடையினை பராமரிப்பு பணி மேற்கொள்ள விருப்பம் தெரிவித்து 16/11/2016 அன்று மாநகராட்சி அலுவலகத்தில் விருப்பக்கடிதம் கொடுத்துள்ளார்.

எனவே தூத்துக்குடி மாநகராட்சி மேட்டுப்பட்டி (திரேஸ்புரம்) பகுதியில் மாநகராட்சிக்குச் சொந்தமான கிராம எண்.28, புல எண் 116/1 மற்றும்116/3 என்ற இடத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள எரிவாயு தகன மேடையை பராமரிக்க விருப்பம் தெரிவித்து வரப்பெற்ற சூர்யா டிரஸ்ட், தூத்துக்குடி என்ற நிறுவனத்திற்கு அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் அவ்வப்போது வகுக்கும் விதிமுறைகளுக்கும், வழிகாட்டுதவ் நெறிமுறைகளுக்கும் மற்றும் இதர சட்டவிதிமுறைகளுக்கும் உட்பட்டு அரசாணையில் அனுமதிக்கப்பட்டுள்ள விபரப்படி மேற்கண்ட சூர்யா டிரஸ்ட், தூத்துக்குடி என்ற நிறுவனத்திற்கு மேட்டுப்பட்டி (திரேஸ்புரம்) எரிவாயு தகன மேடையை பராமரிக்க மூன்று

ஆண்டுகளுக்கு அனுமதி வழங்குவது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**
மேட்டுப்பட்டி (திரேஸ்புரம்) பகுதி எரிவாயு தகன மேடையை மூன்று ஆண்டுகளுக்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டும், அவ்வப்போது நடைமுறையில் வகுக்கப்படும் சட்டவிதிமுறைகளுக்கு உட்பட்டும் சூர்யா டிரஸ்ட், தூத்துக்குடி என்ற நிறுவனத்திற்கு வழங்குவது குறித்து மாமன்றம் பரிசீலித்து அனுமதிக்கலாம்.

இ1 / 13075/2011

**10.**தூத்துக்குடி மாநகராட்சி வார்டு எண்**54** ஜெ.எஸ். நகர் பகுதியில் உள்ள மாநகராட்சி தொடக்கப்பள்ளியினை சுற்றி காம்பவுண்ட் சுவர் இல்லாததாலும் பள்ளி வளாகத்தில் முள் செடிகள் வளர்ந்து பாதுகாப்பில்லாமல் இருந்து வருவதால் பள்ளியில் படிக்கும் மாணவ மாணவிகளின் பாதுகாப்பு கருதி காம்பவுண்ட் சுற்று சுவர் கட்டவும் மற்றும் பள்ளி வளாகத்தில் பேவர் பிளாக் அமைத்திடவும் ரூ. **12.95** லட்சம் மதிப்பீட்டில் கல்வி நிதி **2016–17**ஆம் ஆண்டு பணியில்மேற்கொள்ள பணிகள் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் அனுமதிக்கலாம் இ1/5219/2016

**11.**தூத்துக்குடி மாநகராட்சிப்பகுதியில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை அரசாணை (4டி) எண்.3,நாள்22/10/2012ல் கண்டுள்ள அரசாணையின்படி குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணிக்கு ரூ.282.44கோடி நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, திட்டப்பணிகள் 6 தொகுப்புகளாக பிரித்து பணிகள் நடைபெற்று வருகின்றன. மேற்கண்ட திட்டப்பணியினை கண்காணிப்பு பணி மேற்கொள்ள திட்டமேலாண்மை தொழில்நுட்ப ஆலோசராக மெசர்ஸ் ஸ்டுப் கன்சல்டன்ட் நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்போது குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணிக்கான திட்டமேலாண்மை தொழில்நுட்ப ஆலோசராக மெசர்ஸ் ஸ்டுப் கன்சல்டன்ட் நிறுவனத்தின் ஒப்பந்தகாலம் **31–08–2016** அன்று முடிவடைந்து விட்டது. ஆனால் குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணியானது **82**ரூ முடிவடைந்த நிலையில், மீதமுள்ள பணிகள் எதிர்வரும் பிப்ரவரி **2017** மாதத்திற்குள் முடிவடைந்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே மேற்கண்ட திட்டப்பணி தொடர்ந்து நடைபெற ஏதுவாக **24–11–2016** அன்று சென்னையில் நடைபெற்ற கூசூருஜகுளுடு சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் முன்னிலையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகளில் மெசர்ஸ் ஸ்டுப் கன்சல்டன்ட் நிறுவனத்தின் ஒப்பந்தகாலத்தினை **6** மாத கால அளவிற்கு காலநீட்டிப்பு செய்ய முடிவு செய்யப்பட்டதின் பேரில் மேற்கண்ட மெசர்ஸ் ஸ்டுப் கன்சல்டன்ட் நிறுவனத்திற்கு கூசூருஜகுளுடு சென்னை நிறுவனத்தால் வழங்கப்படும் தொகை போக, மீதமுள்ள தொகையினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>** மாமன்றம் அனுமதிக்கலாம் **இ1 / 7994 / 2013**

**12.**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை அரசாணை (4டி) எண்.3, நாள்22/10/2012 ன்படி குடிநீர் திட்டப்பணிக்கு ரூ.282.44கோடி நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, திட்டப்பணிகள் 6 தொகுப்புகளாக பிரித்து பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் வாகைகுளம், கோரம்பள்ளம், புதுக்கோட்டை ஆகிய பகுதிகளில் சுமார் 1.80கி.மீ தூரத்திற்கு தேசிய நெடுஞ்சாலையில் 1200எம்எம் குழாய் பதிக்க பணிகள் மேற்கொள்ளும் போது, தேசிய நெடுஞ்சாலையில் போதிய இடவசதி இல்லாத காரணத்தினால் பணிகள் நிறுத்தப்பட்டு விட்டன. மேலும், தேசிய நெடுஞ்சாலையில் உள்ள வடிகாலை அப்புறப்படுத்திவிட்டு அதனருகில் உள்ள சர்வீஸ் ரோடு வழியாக குழாய் பதிக்கும் பணிகள் மேற்கொள்ள முற்படும் போது தேசிய நெடுஞ்சாலைத்துறையால் அனுமதி அளிக்கப்படவில்லை. இது தொடர்பாக NHAI திட்ட இயக்குநரிடம் விசாரித்தபோது இச்சாலையினை வெட்டி குழாய் பதிக்க வேண்டுமெனில் உத்தேச மதிப்பீடு ரூ.12 கோடி முதல் ரூ.14கோடி ஆகும் எனவும்,திட்ட அனுமதிபெற குறைந்தது 3மாதம் காலம் ஏற்படும் எனவும் தெரிவித்தனர்.

இந்நிலையில், மேற்கண்ட திட்டப்பணி மேற்கொள்வதில் காலதாமதம் ஏற்படுவதுடன், கூடுதல் செலவினம் ஏற்படும் சூழல் உருவானது. இதனைக்கருத்திற் கொண்டு, ஏற்கனவே செல்லும் மாநகராட்சிக்கு சொந்தமான குடிநீர் வழித்தடபாதையில் உள்ள 400 எம்எம், பிஎஸ்சி குழாயின் அடியில் 1200 எம்எம் பதிக்க வாய்ப்பு உள்ளபடியாலும், தேசிய நெடுஞ்சாலைத்துறை அனுமதி பெற அவசியம் எழாத காரணத்தினால், ஏற்கனவே உள்ள குழாய் வழித்தடத்தில் உள்ள 400 எம்எம், பிஎஸ்சி குழாயினை அப்புறப்படுத்திவிட்டு, அதற்கு பதிலாக 400எம்எம், எம்எஸ் குழாய் பதிக்கவும், அதன் அடிப்பகுதியில் 1200 எம்எம் குழாய் பதித்திட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டது.

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் குடிநீர் திட்டப்பணி குறித்த ஆய்வு கூட்ட நடவடிக்கைகள் நாள், 07/06/2016ல் கண்டுள்ள ஆய்வுகூட்ட கருத்துக்களின் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, மெசர்ஸ், ஜெ.எஸ்.அசோசியேட் டெவலப்மென்ட் இந்தியா பிரைவேட் லிமிட் என்ற நிறுவனத்திற்கு மூன்று தொகுப்புகளாக பணிகள் மேற்கொள்ள மாநகராட்சி பொதுநிதியில் வேலை உத்தரவு வழங்கப்பட்டு ரூ96.80 லட்சம் மதிப்பீட்டில் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில், இப்பணி JICA திட்டத்திற்கு தொடர்புடையது என்பதாலும், பொது நிதியில் போதிய நிதி இல்லாததாலும் இப்பணிகளுக்கான செலவினம் ரூ.95,93,445/.ஐ, குடிநீர் அபிவிருத்தி திட்ட நிதி (JICA)யில் மேற்கொள்ளப்பட்டுள்ளதை மாமன்றம் அங்கீகரிக்க வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> மாமன்றம் அங்கீகரிக்கலாம் இ1 / 22751 / 2008

**13.**மத்திய அரசால் ரூ.500 மற்றும் ரூ.1000 நோட்டுகள் செல்லாது என அறிவிப்பு வெளியானதைத் தொடர்ந்து, அரசு நிறுவனங்கள் மேற்கண்ட நோட்டுகளை குறிப்பிட்ட கால கெடுவுக்குள் உரிய வரி இனங்கள் பெற்றுக்கொள்ளலாமென அறிவிப்பு வெளியிட்டதை பொது மக்கள் அறியும் வண்ணம் விளம்பரம் செய்வதற்கு ஏதுவாக தூத்துக்குடி மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்து வரி, தொழில் வரி, குடிநீர் கட்டணம் மற்றும் மாநகராட்சி கடை வாடகை போன்ற அனைத்து வரி இனங்களையும் தாமதமின்றி, உடனடியாக செலுத்த வேண்டுமென தெரிவித்து ஆட்டோ மற்றும் செய்தித்தாள் மூலம் விளம்பரம் செய்ய மாமன்றம் அங்கிகாரம் வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> : மாமன்றம் அங்கிகரிக்கலாம். அ1/1342/12

**14.**தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதிகளான, பாளைரோடு **3**வது மைல் முதல் நகரின் முக்கிய பகுதிகளான காய்கனி மார்க்கெட் அண்ணாசிலை, ஜெயராஜ் சாலை, எட்டையாபுரம் சாலை (எடிசன் பெட்ரோல் பங்க்), **2**ம் கேட் பகுதி, குருஸ் பர்னாந்து சிலை மற்றும் விக்டோரியா சாலை, பீச் ரோடு ஆகிய பகுதிகளில் உள்ள சாலையோர ஆக்கிரமிப்புகள் அகற்றுதல், நிரந்தர மற்றும் தற்காலிக விளம்பர பலகைகள் அகற்றுதல் மற்றும் சாலையோர வாகன நிறுத்தங்களை பாதசாரிகளுக்கு ஏற்றவாறு சரிசெய்தல் ஆகிய நடவடிக்கைகள், மாநகராட்சி, நெடுஞ்சாலை துறை, காவல் துறை மற்றும் வருவாய் துறை மூலம் மேற்கொள்ளப்பட்டது. இது தொடர்பாக சாலையோர வியாபாரிகள், வர்த்தகர்கள் தங்கள் இடத்திற்கு முன்பு உள்ள ஆக்கிரமிப்புகளை தாங்களாகவே அகற்றிக் கொள்ள கேட்டுக்கொள்ளப்பட்டது. தவறும் நிலையில் மாநகராட்சி மூலம் அகற்றப்படுத்தப்–படுவதுடன், காவல் துறையினரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அபராதம் விதிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

மேற்கண்ட நடவடிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u> மன்றம் பதிவு செய்யலாம். எப்1/5292/2016

**15.** சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கு எண் W.P.(MD) எண். **21345/15** உத்திரவின்படி, மாநகராட்சிப் பகுதியில் பன்றிகளை வளர்க்க தடை விதிக்ககப்பட்டதின் பேரில், தூத்துக்குடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சுகாதாரக் கேடு டெங்கு போன்ற காய்ச்சல் மற்றும் சுற்றுப்புறத்திற்கு தீங்கு விளைவிக்கும் வகையில் அனுமதி பெறாமல் வீடுகள் மற்றும் பண்ணைகளில் வளர்க்கப்படும் பன்றிகள் மற்றும் தெருக்களில் சுற்றித் திரியும் பன்றிகளை பிடித்து அப்புறப்படுத்திட மேற்கொள்ளப்படும் பணிகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u> மாமன்றம் பதிவு செய்யலாம் எச்2/4039/15

**16.** தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதிகளில் பொது சுகாதாரம் மூலம் டெங்கு காரணிகளையும், கொசுப்புழு உற்பத்தியினை தடுத்திடவும், கொசு உற்பத்தியாகும் இடத்தினை கண்டறிந்து கொசுப்புழுக்களை அழித்திடும் விதமாக காரணிகளை அப்புறப்படுத்துதல், கொசுப்புகை மருந்து அடித்தல், கொசு மருந்து தெளித்தல், கிருமி நாசினி தெளித்தல், மக்களிடையே பொது சுகாதாரம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்த தற்காலிக களப்பணியாளர்களை பணியமர்த்தவும், தற்காலிக களப்பணியாளர்களுக்காகும் செலவுத் தொகையினை மாநகராட்சி பொதுநிதியிலிருந்து செலவு செய்யவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u> மாமன்றம் அனுமதிக்கலாம். எச்2/ 8776/12

தூத்துக்குடி மாநகராட்சி
நாள். **28.11.2016**

ஆணையர் (ம) தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி